(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

FWC

தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
நான்காம் தவணைப் பரீட்சை - 2024
National Field Work Centre, Thondaimanaru
4th Term Examination - 2024

கணக்கீடு - I Accounting - I	Two Hours Gr- 13 (2024)	33 | T | I

பகுதி I

சரியான விடையினைத் தெரிவு செய்து அடைப்பிற்குள் அதன் இலக்கத்தினைக் குறிப்பிடுக.

01) கணக்கீட்டுச் செயன்முறையின் சரியான ஒழுங்கு முறையாக அமைவது?

(1) அறிக்கையிடல், அங்கீகரித்தல், வகைப்படுத்தல், தொகுத்தல், தகவல் பரிமாற்றம் செய்தல்
(2) அங்கீகரித்தல், வகைப்படுத்துதல், அறிக்கையிடல், தொகுத்தல், தொடர்பு கொள்ளல், விளக்குதல்
(3) அங்கீகரித்தல், அறிக்கையிடல், தொகுத்தல், விளக்கம், தகவல் பரிமாற்றம்
(4) அங்கீகரித்தல், மற்றும் அளவிடுதல், பதிவுசெய்தல், வகைப்படுத்தல், தொகுத்தல், தகவல்பரிமாற்றம் செய்தல், விளக்குதல்
(5) அங்கீகரித்தல், வகைப்படுத்தல், சுருக்குதல், தொகுத்தல் மற்றும் விளக்குதல், தகவல் பரிமாற்றம் செய்தல். (...........)

02) பின்வருவனவற்றில் எது "முதலீட்டாளர்களுக்கு" நேரடியாக தேவைப்படும் தகவலாக கருதப்படலாம்?

(A) ஒரு நிறுவனத்தில் முதலீடு செய்ய வேண்டுமா? முதலீட்டை விற்க வேண்டுமா? அல்லது நீண்டகாலம் தக்கவைத்துக் கொள்ள வேண்டுமா? என்பதனை தீர்மானிக்க தேவையான தகவல்கள்
(B) பொறுப்புக்களை தீர்ப்பதற்கு நிறுவனத்தில் போதுமான திறன் உள்ளதா என்பதை.
(C) பங்குலாபத்தினை செலுத்தும் திறனை நிறுவனம் கொண்டுள்ளதா?
(D) பொருட்கள் சேவைகளை தொடர்ச்சியாக வழங்குவதற்கான நிறுவனத்தின் திறன் பற்றிய தகவல்கள்

(1) கூற்று A மற்றும் C (2) கூற்று A, மற்றும் B (3) கூற்று B மற்றும் C
(4) கூற்று A, மற்றும் D (5) கூற்று B, மற்றும் D (...........)

03) நிதிக்கணக்கீட்டின் முக்கியத்துவத்தினை பின்வரும் கூற்றுக்களில் எது சிறப்பாக விபரிக்கிறது?

(1) தீர்மானம் எடுப்பதற்கு முகாமைத்துவத்திற்கு தேவையான நிதித்தகவல்களை வழங்குதல்
(2) வணிகத்தின் சொத்துக்கள் எவ்வாறு பயன்படுத்தப்பட்டன என்பது குறித்து நிர்வாகத்திற்கு தேவையான தகவல்களை வழங்குதல்
(3) கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளின் அடிப்படையிலான பொருளாதார தகவல்களை வியாபாரத்தின் பங்குதாரர்களுக்கு தீர்மானம் எடுப்தற்காக வழங்குதல்.
(4) வணிகத்தின் வருமானம் உழைக்கும் திறன் மற்றும் நிதி நிலமை குறித்து வணிகத்தின் உள்ளக தரப்பினருக்கு தெரியப்படுத்தல்
(5) கணக்கீட்டு நிறுவனம் தொடர்பான அனைத்து தகவல்களையும் அதன் பங்குதாரர்களுக்கு வழங்குதல் (...........)

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

04) கணக்கீட்டு செயன்முறையொன்றின் போது வணிக வளங்களை அளவு ரீதியாகவும்,பணப் பெறுமதியிலும் அளவிடுதற்கு பயன்படுத்தப்படும் பல்வேறு நுட்பமுறைகளை உள்ளடக்கிய சூழல் யாது?

(A) - சட்டச்சூழல்

(B) - நுட்ப மற்றும் தெழில்சார் சூழல்

(C) - தொழில்நுட்ப சூழல்

(D) - பொருளாதார அரசியல் சூழல்

(E) - சமூக கலாசார சூழல் (...........)

05) இரு பிரிவினர்களிடையே வளங்களின் பரிமாற்றம் இடம் பெறாவிடினும் வணிகமொன்றின் சொத்துக்கள்,பொறுப்புக்கள் மற்றும் உரிமையாண்மை என்பவற்றில் தாக்கத்தினை ஏற்படுத்தும் பணத்தினால் அளவிடக் கூடியவைகள் எவ்வாறு அழைக்கப்படும்?

(1) கணக்கீட்டு உள்ளீடுகள் (2) கணக்கீட்டு வெளியீடுகள் (3) கொடுக்கல் வாங்கல்கள்

(4) நிதிசார் கொடுக்கல் வாங்கல்கள் (5) நிகழ்வுகள் (...........)

06) தினேசிகா ஒரு தனி வியாபாரி. அவரது வழங்குநர் ஒருவர் அவருக்கு ரூ 3500 காசுத்தள்ளுபடி (கழிவு) வழங்கியுள்ளார். இக் கொடுக்கல் வாங்கல்கல் காரணமாக கணக்கீட்டு சமன்பாட்டில் எந்த உறுப்புக்கள் மாற்றமடையும்?

(1) சொத்துக்கள் மட்டும்

(2) பொறுப்புக்கள் மட்டும்

(3) சொத்து,பொறுப்புக்கள் மட்டும்

(4) உரிமையாண்மை மற்றும் பொறுப்பு

(5) உரிமையாண்மை மற்றும் சொத்துக்கள் (...........)

07) தணிகை வணிகத்தின் காசு கட்டுப்பாட்டுக்கணக்கீடு செலவு மீதியாக ரூ50000 ஐக் காட்டியது.அதன் உரிமையாளர் தனது சொந்த நிதியில் இருந்து இந்த வங்கி மேலதிகபற்றினை கொடுத்து தீர்த்தார் இது கணக்கீட்டு சமன்பாட்டில் ஏற்படுத்தும் விளைவு.

(1) சொத்து அதிகரிப்பு ரூபா 50000, பொறுப்பு அதிகரிப்பு ரூபா 50000

(2) உரிமையாண்மை அதிகரிப்பு ரூபா 50000, சொத்து அதிகரிப்பு ரூபா 50000

(3) உரிமையாண்மை அதிகரிப்பு ரூபா 50000,பொறுப்பு குறைவடைதல் 50000

(4) உரிமையாண்மை அதிகரிப்பு ரூபா 50000,வருமானம் குறைவடைதல் 50000

(5) செலவீனம் குறைவடைதல் 50000, உரிமையாண்மை குறைவடைதல் ரூபா 50000 (...........)

08) இசையரசி வணிகத்தின் சில கொடுக்கல் வாங்கல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

=> இசைநிலவிற்கு ரூபா 40000 பெறுமதியான பொருட்கள் 02.01.2024 அன்று கடனுக்கு வாங்கப்பட்டன.

=> வணிகப் பயன்பாட்டிற்காக 03.01.2024 அன்று ரூபா 500000 கிரயமான விநியோக வான் கடனுக்கு வாங்கப்பட்டது.

=> நிலாவிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களில் ரூபா 15000 கிரயமான பெருட்கள் 06.01.2024 இல் திருப்பி அனுப்பப்பட்டது.

மேலே உள்ள கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புடைய மூல ஆவணங்கள் முறையே எவை?

(1) பற்றுசீட்டு, நாட்குறிப்பு உறுதிச்சீட்டு, மற்றும் வரவுத்தாள்

(2) பற்றுசீட்டு, நாட்குறிப்பு உறுதிச்சீட்டு, மற்றும் செலவுத்தாள்

(3) விற்பனைப்பட்டியல், நாட்குறிப்பு உறுதிச்சீட்டு, மற்றும் வரவுத்தாள்

(4) விற்பனைப்பட்டியல், கொடுப்பனவு உறுதிச்சீட்டு, மற்றும் வரவுத்தாள்

(5) கொள்வனவு பட்டியல், கொடுப்பனவு உறுதிச்சீட்டு மற்றும் செலவுத்தாள் (...........)

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

09) சிதம்பரம் என்ற தனியார் உரிமை வணிகத்தின் தகவல்கள் வருமாறு

31.12.2023 இல் உரிமையாண்மை	ரூ 1253000
01.01.2023 இல் உரிமையாண்மை	ரூ 1069000
மேலதிக மூலதனம்	ரூ 20000
பற்றுக்கள் - காசு	ரூ 49000
- சரக்கிருப்பு (விற்பனை விலையில்)	ரூ 42000

பண்டங்கள் கிரய விலையிலே பற்றப்படுகிறது. எனினும் மேலே காட்டப்பட்ட பற்றுக்கள் விற்பனை விலையில் பதியப்பட்டுள்ளது.விற்பனை விலை கிரயத்துடன் 20% இலாபம் சேர்ப்பதன் மூலம் கணக்கிடப்படுகிறது.2023 ம் வருட இலாபம் யாது?

(1) ரூபா 118000 (2) ரூபா 246000 (3) ரூபா 255000

(4) ரூபா 248000 (5) ரூபா 186000 (…….)

➢ **10,11 மற்றும் 12 ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்கு கீழே தரப்பட்ட தகவல்களை பயன்படுத்துக.**

கானகன் என்பவரது வணிகத்தின் 01.01.2024 திகதியில் காணப்பட்ட மொத்தச் சொத்துக்கள் ரூ 1020000உம் மொத்தப் பொறுப்புக்கள் ரூபா 350000 உம் ஆகும். 2024 ஜனவரி முதல் வாரத்தில் இடம் பெற்ற கொடுக்கல் வாங்கல்கள்.

(1) பட்டியல் விலை ரூ 120000 ஆன இருப்புக்கள் 10% வியாபாரக் கழிவில் அழகன் வணிகத்திடம் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது.

(2) மேலே கொள்வனவு செய்யப்பட்ட பண்டங்களில் ரூ 30000 கிரய விலையுடைய பொருட்கள் பொருத்தமற்ற காரணத்தால் வழங்குனருக்கு திருப்பி அனுப்பப்பட்டது.

(3) வாடிக்கையாளர் ஒருவரிடம் இருந்து விற்பனை முற்பணம் ரூ 20000 பெறப்பட்டது.

(4) மேலே 3 இல் காட்டப்பட்ட வாடிக்கையாளருக்கு பட்டியல் விலையான ரூபா 100000 வியாபாரக்கழிவில் கடனுக்கு விற்பனை செய்யப்பட்டது. (இப்பொருட்களின் கிரயம் ரூபா 50000)

(5) அழகன் வணிகத்துக்கு செலுத்த வேண்டிய கடன் தொகை 10% காசுக் கழிவில் செலுத்தப்பட்டது. (………)

10) மேலே உள்ள 1,2 மற்றும் 3 ஆகிய கொடுக்கல் வாங்கல்களை கானகன் வணிகத்தின் அறிக்கைப்படுத்த பயன்படுத்தப்படும் ஆரம்ப பதிவேடுகள் முறையே

(1) கொள்வனவு நாளேடு, வெளித்திரும்பல் நாளேடு, காசு பெறுவனவு நாளேடு

(2) கொள்வனவு நாளேடு, வெளித்திரும்பல் நாளேடு, காசு கொடுப்பனவு நாளேடு

(3) விற்பனை நாளேடு, உட்திரும்பல் நாளேடு, காசு பெறுவனவு நாளேடு

(4) விற்பனை நாளேடு, உட்திரும்பல் நாளேடு, காசு கொடுப்பனவு நாளேடு

(5) கொள்வனவு நாளேடு, வெளித்திரும்பல் நாளேடு, பொது நாளேடு (...........)

11) ஜனவரி முதல் வாரத்தின் முடிவில் கானகன் வணிகத்தின் மொத்த உரிமையாண்மையானது.

(1) ரூபா 717900 (2) ரூபா 717500 (3) ரூபா 717800

(4) ரூபா 718000 (5) ரூபா 718700 (...........)

12) அழகன் வணிகத்திற்கு இக் காலப்பகுதியில் செலுத்திய காசு மற்றும் கிடைத்த கழிவு முறையே.

(1) ரூபா 72000, ரூபா 7200 (2) ரூபா 78000 , ரூபா 7800 (3) ரூபா 70200 , ரூபா 7020

(4) ரூபா 70200 , ரூபா 7200 (5) ரூபா 70200 , ரூபா 7800 (...........)

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

❖ **13ம் 14ம் வினாக்களுக்கு விடையளிக்க பின்வரும் தகவல்களைப் பின்பற்றுக.**

கடன்படுநர் குறைவடைதல் ரூ 60000

கடன் கொடுநர் அதிகரித்தல் ரூ 40000

இருப்புக்கள் குறைவடைதல் ரூ15000

2023 ம் ஆண்டில் ரூ 10000 காசுக்கழிவில் சென்மதியாளரிடம் இருந்து பெறப்பட்டது. மற்றும் கடன்படுநருக்கு வழங்கப்பட்ட காசுக்கழிவுகள் ரூபா 15000, மற்றும் உட்திரும்பல் ரூ5000 வழங்குநருக்கு திருப்பிய பொருட்கள் ரூபா 8000 காசுக்கு கொள்வனவு ரூபா 110000 , கடன் கொள்வனவுகள் ரூ120000 , காசு விற்பனை ரூபா 150000 கடன் விற்பனை ரூபா 190000 ஆகும்.

13) 2023 ஆம் வருடத்தில் கடன்படுநரிடம் பெறப்பட்ட தொகை.

(1) ரூ 210000 (2) ரூ 180000 (3) ரூ 260000

(4) ரூ 70000 (5) மேலுள்ள எதுவும் இல்லை. (...........)

14) 2023 ஆம் ஆண்டில் கடன்கொடுநருக்கான கொடுப்பனவுகள்

(1) ரூ 62000 (2) ரூ 85000 (3) ரூ 100000

(4) ரூ 70000 (5) மேலுள்ள எதுவும் இல்லை. (...........)

15) 31.03.2024 வியாபார வருமதியாளர் கட்டுப்பாட்டு கணக்கு மீதி ரூ 80000 அன்றைய நிலுவைகளின் பட்டியலின் மொத்தமானது இந்த சமநிலையிலிருந்து வேறுபட்டு காணப்பப்பட்டது. மற்றும் பின்வரும் காரணங்கள் இந்த வேறுபாட்டினை பாதித்தன.

- விற்பனை நாளேட்டின் மொத்தம் ரூபா 2000 குறைவாக கூட்டப்பட்டிருந்தது.
- கடன் விற்பனையொன்று 20000 ஆனது விற்பனை நாளேட்டில் ரூ 2000 என பதிவு செய்யபபட்டிருந்தது
- கடன் விற்பனை ரூ 4500 தொடர்புடைய நபர் கணக்கில் ரூ 5400 என பதிவு செய்யப்பட்டிருந்தது.
- அனுமதிக்கப்பட்ட கழிவு ரூ 500 கடன்படுநர் பேரேட்டில் குறித்த நபர் கணக்கில் பதியப்படவில்லை.

31.03.2024இன் நிதிநிலை அறிக்கையில் காட்டப்படவேண்டிய வருமதியாளர் மீதி யாது?

(1) ரூபா 100000 (2) ரூபா 88600 (3) ரூபா 79100

(4) ரூபா 98000 (5) ரூபா 98600 (...........)

16)பின்வருவனவற்றில் 31.03.2024 இல் வங்கிக் கணகில் இணைக்க கூற்றில் சேர்க்கப்பட வேண்டியவைகள்.

A - பணம் பெறுதலுக்காக வங்கியில் சமர்ப்பிக்காத காசோலைகள்

B - வேறுநபருக்கு சொந்தமான காசோலை ஒன்று தவறுதலாக வங்கிக் கூற்றில் வரவு வைத்தல்

C - மறுக்கப்பட்ட காசோலைகள்

(1) A மட்டும் (2) B மட்டும் (3) A மற்றும் B

(4) A மற்றும் C (5) C மட்டும் (...........)

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

17) சாகித்தியன் வணிகத்தின் 31.03.2024 இல் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதி சமப்படாமையால் வேறுபாடு தொங்கல் கணக்கு இடப்பட்டு பின்னர் பின்வரும் வித்தியாசங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

- கடன்படுநரின் பெற்ற காசு ரூ 15000 காசுப்பெறுவனவு நாளேட்டின் ரூ 1500 எனப்பதியப்பட்டு இருந்தது.
- காசுக் கொடுப்பனவு நாளேட்டு கழிவு நிரலின் கூட்டுத்தொகை ரூபா 5500 கட்டுப்பாட்டுக்கணக்கில் சரியாக பதிந்த போதிலும் கொடுத்த கழிவுக் கணக்கில் ரூ 5050 என வரவில் பதியப்பட்டது.

மேற்படி வழுக்கள் காரணமாக 31.03.2024 இல் பரீட்சைமீதியில் தோன்றும் வித்தியாசம் ?

(1) ரூ13950 (2) ரூ2950 (3) ரூ10550 (4) ரூ1950 (5) ரூ450

(…….)

18) வணிகத்துக்குரிய வளங்கள் அவைகளுக்கு செலவிடப்பட்ட செலவீனங்கள் என்பன அவற்றை உரிமையாக்கிக் கொள்ளும் போது உணமையான பிரதிநிதித்துவத்தின் அடிப்படையில் பதிதல் என்பதுடன் தொடர்புடைய எண்ணக்கரு யாது?

(1) தேறல் (2) வரலாற்றுக்கிரயம் (3) அட்டுறு (4) பாதுகாப்பு (5) இணைதல்

(……..)

19) வணிகமொன்று நீண்டகாலம் பயன்பாடுடைய சார்பளவில் முக்கியத்துவமற்ற பொருட்களின் கிரயம் சொத்தாக கணக்குகளில் காட்டப்படுவதில்லை. இங்கு பின்பற்றப்பட்ட எண்ணக்கரு யாது?

(1) பொருண்மை (2) அட்டுறு (3) ஆவர்த்தனம் (4) வரலாற்றுக்கிரயம் (5) பாதுகாப்பு

(…….)

20) உற்பத்தி வணிகமொன்றின் 2023 ஆம் ஆண்டு தொடர்பான விபரம் வருமாறு

ஆரம்ப பூர்த்திப் பொருள் ரூ 60000
இறுதிப் பூர்த்திப் பொருள் ரூ 90000
விற்பனை ரூ 500000

இவ் வணிகம் கிரயத்துடன் 25% இலாபம் கூட்டி விற்பனை செய்வது வழக்கம். இவ்வாண்டுக்கான உற்பத்திக்கிரயம் யாது?

(1) ரூ 430000 (2) ரூ 405000 (3) ரூ 420000 (4) ரூ 450000 (5) ரூ 375000

(…….)

❖ **21ஆம் 22ஆம் வினாக்களுக்கு விடையளிக்க பின்வரும் தகவல்களை பயன்படுத்துக.**

அக்கினி விளையாட்டுக்கழகம் 01 ஏப்ரல் 2023 இல் மாதாந்தம் ரூ300 வீதம் செலுத்தும் 40 அங்கத்தவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. அதே தினத்தில் 10பேர் தலா ரூ3000 வீதம் செலுத்தி ஆயள் சந்தா செலுத்தி ஆயுள் உறுப்பினராக சேர்ந்தனர். ஆயுட்சந்தாவானது 10 வருடங்களுக்கு பதிவளிக்கப்படும். 31.03.2024 இல் உள்ள மீதிகள்

திரண்டநிதி ரூபா 250000
ஆயுள்சந்தா ரூபா ரூபா 27000
நிலுவைச்சந்தா ரூபா 10800
முற்பண சந்தா ரூபா 18000
நூல்நிலைய நன்கொடை ரூபா 200000

21) 31.03.2024 இல் முடிவடைந்த ஆண்டுக்கு காசாகப் பெற்ற அங்கத்துவக்கட்டணம் (ஆயுள்சந்தா நீங்கலாக)

(1) ரூபா 124200 (2) ரூபா 151300 (3) ரூபா 136800
(4) ரூபா 175000 (5) ரூபா 151200 (…….)

22) 31.03.2024 இல் உள்ள கழகத்தின் மொத்தச்சொத்துக்கள்

(1) ரூபா 250000 (2) ரூபா 450000 (3) ரூபா 278000
(4) ரூபா 460800 (5) ரூபா 495000 (…….)

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

❖ **23ஆம் 24ஆம் வினாக்களுக்கு விடையளிக்க பின்வரும் தகவல்களை பயன்படுத்துக.**

கவிதா, பிரியா ஆகியோர் முறையே ரூபா 500,000 , ரூபா 300,000 மூலதனமாக இட்டு 01.04.2023 இல் ஆரம்பிக்கப்பட்ட பங்குடமை ஒப்பந்தம் பின்வருமாறு,

பங்காளர் மூலதன மீதிகளுக்கு வருடாந்தம்10% வட்டி வழங்கப்படும்.

இலாபநட்டங்கள் சமமாக பகிரப்படும்

ஏனைய தகவல்கள்

1. 01.10.2023 இல் பிரியாவழல் இய கடன் ரூ200000 தொடர்பில் கடன்வட்டி அட்டுறு நிலையில் உள்ளது.
2. கவிதா பிரியா ஆகியோரின் எடுப்பனவுகள் முறையே ரூபா 50000, ரூபா 70000 ஆகும்.

31.03.2024 இல் பங்குடமை வணிகத்தின்

மொத்தச் சொத்துக்கள் 1145000

மொத்தப்பொறுப்புக்கள் 300000

23) 31.03.2024 இல் முடிவடைந்த ஆண்டுக்கு பங்குடமை வணிகம் உழைத்த ஆண்டுக்கான இலாபம் யாது?

(1) ரூபா 80000 (2) ரூபா 160000 (3) ரூபா 450000 (4) ரூபா 165000 (5) ரூபா 170000

(…….)

24) பங்காளி பிரியாவின் 31.03.2024 இல் உரிமையாண்மை

(1) ரூபா 300000 (2) ரூபா 50500 (3) ரூபா 305000 (4) ரூபா 500000 (5) ரூபா 310000

(…….)

25) LKAS - 02 (இருப்புக்கள்) இன்படி இருப்புக்களை விலையிடுவதற்கு முதல் உள் முதல்வெளிமுறை [FIFO] சிபார்சு செய்யப்பட்டுள்ளது. இம்முறையின் பிரதி கூலங்களில் ஒன்றாக அமைவது

(1) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறை.
(2) நடைமுறைச் சந்தைவிலையில் இருப்பு விநியோகம் செய்தல்
(3) இருப்புக்களின் பெறுமதி நடைமுறைச் சந்தை விலையினைக் கொண்டதாக காணப்படல்.
(4) பெறப்பட்ட விலையில் இருப்புக்கள் விநியோகம் செய்யப்படல்.
(5) விலைகள் அதிகரித்துச் செல்லும் நிலையில் இலாபத்தினை மிகைப்படுத்தி காட்டி இருத்தல்.

(…….)

26) உற்பத்தி நிறுவனமொன்று உற்பத்தி செயற்பாடுகளுக்காக இறக்குமதி செய்த இயந்திரமொன்று 01.04.2023 இல் பயன்படுத்தியது. இவ்வணிகம் VAT தொடர்பில் பதிவு செய்யப்பட்டவையாகும். இறக்குமதி செய்த இயந்திரம் தொடர்பாக ஏற்பட்ட கிரய உருப்படிகள் பின்வருமாறு,

	ரூ 000
இயந்திரம் தொடர்பில் செலுத்தியகாசு(15% VAT உட்பட)	1380
இறக்குமதி தீர்வை	300
துறைமுகத்தில் இருந்து கொண்டுவரும் கூலி	60
பொறியியல் தொழில்சார் கட்டணம்	30
இயந்திர பராமரிப்பு கிரயம்	30
இயந்திரம் நிறுவுதற் கட்டணம்	30

இயந்திரத்தின் ஆயுட்காலம் 8 வருடங்கள் இழிவுப்பெறுமதி ரூ 20000 எனவும் மதிப்பிடப்பட்டு நேர்கோட்டு முறையில் தேய்வு இடப்பட்டது. 31.03.2024 இல் முடிவடைந்த வருடத்தில் உற்பத்தி இயந்திரம் தொடர்பில் “ உற்பத்தி மேந்தலையாகக்” கருதப்படும் தொகை யாது?

(1) ரூபா 200000 (2) ரூபா 235250 (3) ரூபா 226250 (4) ரூபா 252000 (5) ரூபா 230000

(…….)

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

27) வருமானங்களை இனங்காணல் நியமம;(SLFRS - 15) இன்படி பின்வரும் நிலைகளில் எவை வருமானமாக ஏற்பிசைவு செய்யப்படுவதில் சரியானது/ சரியானவை?

(A) பொருட்கள் வாடிக்கையாளருக்கு விநியோகப்படல்.

(B) வாடிக்கையாளரது காசோலை வங்கியினால் தீர்க்கப்படும்.

(C) பொருட்களுக்காக வாடிக்கையாளரால் இடப்படும் திடமான கட்டளை.

(D) கொடுக்கல் வாங்கலுடன் தொடர்புடைய பொருளாதார அனுகூலங்கள் நிறுவனத்திற்கு கிடைக்கும் சாத்தியம்.

(1) A, B (2) A, C (3) A, D (4) A, B, D (5) A, B, C, D

(…….)

28) இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 16[SLFRS-16] இன்படி சொத்து பயன்படுத்தும் உரிமையின் கிரயம் தொடர்பில் பின்வருவனவற்றுள் உள்ளடக்கப்படாதவை எது?

(1) குத்தகைப்பொறுப்பின் ஆரம்ப மதிப்பீட்டில் கணிப்பிடப்பட்ட நிகழ்காலப்பெறுமதி.

(2) குத்தகை தவணைக் கட்டணங்களில் உள்ளடக்கிய குத்தகை வட்டி

(3) குத்தகை ஆரம்பிக்கும் தினத்தில் அல்லது அதற்கு முன்னர் செய்யப்பட்ட செலவீனங்கள்.

(4) குத்தகை இறுதியில் சொத்து அகற்றப்படுவதற்கு செலவு ஏற்படுமாயின் அத்தொகை.

(5) குத்தகை கொள்வனவாளர் செலுத்தியுள்ள ஆரம்பக்கிரயம். (…….)

29) LKAS - 08 இன்படி பின்வருவனவற்றுள் எது கணக்கீட்டு மதிப்பீட்டு மாற்றாக கருத முடியாதது எது?

(1) ஆதனம் பொறி உபகரண மீள்மதிப்பீடு

(2) இருப்பு விலையிடல் முறையில் கொண்டு வரும் மாற்றம்

(3) ஆதன பொறி உபகரணங்களின் ஆயுட்கால மாற்றம்.

(4) வருடத்துக்கான வருமான வரி மதிப்பீடு தொடர்பில் மாற்றம்

(5) ஐயக்கடனுக்கான ஒதுக்கீட்டு வீகிதத்தில் மாற்றம். (…….)

30) வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனியின் நிதிநிலைமைக் கூற்றிலிருந்து பெறப்பட்ட தகவல்கள் வருமாறு,

	31.03.2024 (000ல்)	31.03.2023 (000ல்)
கூறப்பட்ட மூலதனம் (சாதாரணபங்குகள்)	5000	4000
மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் (தளபாடம்)	300	500
நிறுத்திவைத்த வருவாய்	2200	2100
வருமான வரி ஏற்பாடு	150	200

31.03.2024 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான மேலதிக தகவல்கள்,

- ✶ செலுத்திய இடைக்காலப் பங்குலாபம் ரூபா 150000
- ✶ வருமான வரிச் செலவீனம் ரூபா 400000
- ✶ ஒதுக்கீடுகளை மூலதனமாக்கல் மூலம் ரூபா 35 விலையில் 10000 பங்குகள்
- ✶ தளபாடம் பொருத்துக்கள் 2வது தடவையாக மீள மதிப்பிடப்பட்டது.

31.03.2024 இல் முடிவடைந்த காலப்பகுதியில் மொத்தமுற்றுமடக்கிய வருமானம் எது?

(1) ரூபா 800000 (2) ரூபா 600000 (3) ரூபா 900000 (4) ரூபா 400000 (5) ரூபா 700000

(…….)

(30x4=120 புள்ளிகள்)

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

➢ **31 -50 வரையான வினாக்களுக்கு பொருத்தமான விடையினை அதற்குரிய இடங்களில் எழுதுக.**

31) கீழே தரப்பட்டுள்ள அறிக்கைகளானது நிதிக் கணக்கீட்டின் கூறு ஒன்றா? அல்லது முகாமைக் கணக்கீட்டின் கூறு ஒன்றா? என்பதனைக் குறிப்பிடுக.

கூற்றுக்கள்	நிதி/ முகாமைக்கூறு
A - நிதி நிலைமைக் கூற்று	....
B - காசுப்பாய்ச்சல் கூற்று	....
C - வரவு செலவுத் திட்டம்	....
D - மேந்தலைப் பகுப்பாய்வுக் கூற்று	....

32) நிறுவனமொன்றின் 2024.03.31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான நிதி அறிக்கைப்படுத்தலின் எண்ணக்கரு சட்டகத்திற்கேற்ப பின்வருவனவற்றுள் சொத்து ஒன்றின் பண்புகளில் சரியாயின் “சரி” எனவும் பிழையாயின் “பிழை” எனவும் குறிப்பிடுக.

	சரி / பிழை
A - வணிகத்தினால் கட்டுப்படுத்தக் கூடியது	....
B - பொருளாதார பயன்களை உருவாக்கும் சாத்தியம் கொண்ட நிகழ்கால வளம்	....
C - எதிர்காலக் கொடுக்கல் வாங்கல் மூலம் தோன்றி இருத்தல்	....
D - பொருளாதார வளப்பரிமாற்றத்தினை ஏற்படுத்தக் கூடியது	....

33) பின்வரும் பேரேட்டுக் கணக்குகள் நிதிக்கூற்றுக்களில் எம் மூலங்களுக்கு உட்பட்டது?

	மூலங்கள்
A - பெறுமதி சேர்வரி செலவு மீதி(VAT)	....
B - இடைக்காலப்பங்குலாபம்	....
C - சொத்துப்பயன்படுத்தல் உரிமை	....
D - மோட்டார் வான் புகைப்பரிசோதனை கட்டணம்	....

34) சீருடைகளை உற்பத்தி செய்யும் வியாபாரமொன்றில் இடம்பெற்ற கீழுள்ள ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களையும் பதிவு செய்வதற்கு பயன்படுத்தப்படும் முதன்மை ஏடுகளைக் குறிப்பிடுக.

	முதன்மைப்பேரேடு
A - $7000m$ துணி கடனுக்கு கொள்வனவு	....
B - $200m$ துணி சேதம் அடைந்தமை	....
C - தையல் இயந்திரத்தின் பெறுமானத்தேய்வு ரூ3000	....
D - 1000 சீருடைகள் சீமான் கம்பனிக்கு விற்பனை	....

35) பின்வரும் ஒவ்வொரு கூற்றிலும் விபரிக்கப்படும் கணக்கீட்டு பதிவேட்டினைக் குறிப்பிடுக.

<u>கூற்று</u>	<u>கணக்கீட்டு பதிவேடு</u>
A - மூல ஏட்டில் உள்ள சில பதிவுகள் இரட்டைப்பதிவின் அடிப்படையில் பதியப்படுவதில்லை.	....
B - அக்கறை உடையோருக்கு தீர்மானம் எடுப்பதற்கு அறிக்கைப்படுத்துவது	....

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

C - திகதி ஒழுங்கில் ஒரு குறிப்பிட்ட வகை கொடுக்கல் வாங்கல்களை பேணும் கணக்குப்புத்தகம் ……………………………………………

D - இரட்டைப்பதிவின் அடிப்படையில் சகல கணக்குகளின் சேர்ப்புக்களை உள்ளடக்கிய புத்தகம். ……………………………………………

36) மணலாறு உற்பத்தி வணிகத்தின் 31 டிசம்பர் 2023 இல் முடிவடைந்த ஆண்டுக்கான தகவல்கள் வருமாறு,

	ரூபா
பயன்படுத்திய மூலப்பொருள் கிரயம்	140000
நேர்கூலிக்கிரயம்	45000
மொத்த உற்பத்திக் கிரயம்	200000
ஆரம்ப மூலப்பொருள் இருப்பு	15000
இறுதி மூலப்பொருள் இருப்பு	22000
விற்பனை விநியோக மேந்தலை	38000

(அ) இவ்வாண்டில் மூலப்பொருள் கொள்வனவு எவ்வளவு?……………………………………………

(ஆ) உற்பத்தி மேந்தலைக்கிரயம் யாது? ……………………………………………

37) பின்வரும் கணக்கீட்டு நிகழ்வுகளுடன் தொடர்புடைய மிகப்பொருத்தமான கணக்கீட்டு எண்ணக்கருவைக் குறிப்பிடுக.

கணக்கீட்டு நிகழ்வு	கணக்கீட்டு எண்ணக்கரு
A - வியாபார வருமதிகள் மீதியின் அடிப்படையில் ஐயக்கடன் ஒதுக்கம் செய்தல்	……………………………………………
B - விற்பனை ஒப்பந்தம் ஏற்பட்டு ஏற்பட்டு வாடிக்கையாளர் திருப்தி அடைந்த பின்னரே அது வருமானமாக கருதப்படும்	……………………………………………
C - சொத்துப்பாவனை உரிமையினை கொள்வனவாளர் ஏடுகளில் சொத்தாக வெளிப்படுத்தல்	……………………………………………
D - இருப்பு மதிப்பீடு செய்வதற்காக முதல் உள் முதல் வெளியே முறையினை தொடர்ந்தும் பின்பற்றல்	……………………………………………

38) பின்வரும் தகவல்கள் 31.03.2024 இல் தயாரிக்கப்பட்ட கடன்படுநர் கட்டுப்பாட்டுக் கணக்கு, அட்டவணை மீதியை இணக்கம் செய்யும் கூற்று தொடர்பானது,

ரூபா 000

கடன்படுநர் கட்டுப்பாட்டு கணக்கு மீதி		320
(+) கட்டுப்பாட்டு கணக்கில் விடுபட்ட மறுத்த காசோலை	100	
கடன்படுநர் செல்வம் கணக்கில் பதியாத எதிரீடு	40	140
		460
(-) கட்டுப்பாட்டுக் கணக்கில் வரவில் பதியப்பட்ட கொடுத்த கழிவு		(60)
கடன்படுநர் அட்டவணை மீதி		400

குறிப்பு - விற்பனை நாளேட்டில் குறைத்துப் பதியப்பட்ட பட்டியல் ஒன்றின் பெறுமதி ரூபா 20000

31.03.2024 நிதிநிலைமைக் கூற்றில் காட்டப்படும் கடன்படுநர் கட்டுப்பாட்டு கணக்கு மீதி யாது?

……………………………………………………

39) ஒற்றுமை விளையாட்டுக்கழகத்தின் 31.03.2024 பின்வரும் தகவல்கள் எடுக்கப்பட்டன.

31.03.2024 இல் உரிமையாண்மை	ரூ 000
திரண்ட நிதி	480
கட்டிட நிதி	260
ஆயுள்சந்தா நிதி	270

சங்கமானது 01.01.2024 இல் ரூ140000 பெறுமதியில் கட்டிடமொன்றினை நிர்மாணித்ததுடன் ஆயுட் சந்தாவில் வருடாந்த வருமானமாக ரூ*30000* 31.03.2024 ம் ஆண்டில் வருமானமாக இனங்காணப்பட்டது. 31.03.2023இல் உள்ளவாறு திரண்ட நிதி ரூபா 260000 ஆகும்.

31.03.2024 இல் முடிவடைந்த வருடத்துக்கான வருமான மிகை?...

➢ **40- 41 ஆகிய வினாக்களுக்கு விடையளிக்க கீழே தரப்பட்ட தகவல்களை பயன்படுத்துக.**

சரண் மற்றும் சாதனா என்போரால் 01.04.2023 அன்று ஆரம்பிக்கப்பட்ட பங்குடமை வணிகத்துடன் தொடர்புடைய ஒப்பந்தம் கீழே தரப்பட்டுள்ளது.

- ✶ சரண் மற்றும் சாதனா ஆகியோரிடையே இலாபநட்டம் 1 : 2 என்றவாறு பகிரப்படும்.
- ✶ சரண் ரூ10000 ஆன வருடச் சம்பளத்துக்கு உரித்துடையவர்.
- ✶ ஏனைய விபரங்கள் கீழ்வருமாறு அமைந்துள்ளது.

அவர்களது உரிமையாண்மை	31.03.2024	01.04.2023
சரண்	420000	300000
சாதனா	680000	600000

- ✶ வருடகாலத்தில் சரண் மற்றும் சாதனா ரூபா 20000, ரூபா 20000 பெறுமதியான பண்டங்களை பற்றி இருந்தமை.
- ✶ வருட காலத்தில் சரணால் ரூ 80000 பெறுமதியான மோட்டார் வான் வணிகத்திற்கு கொண்டுவரப்பட்டது.

40) 31.03.2024 இல் பங்காளர் நடைமுறைக்கணக்கு மீதி

(அ) சரண் ………………………………………………………………………………………..…

(ஆ) சாதனா……………………………………………………………………………………....

41) 31.03.2024 இல் முடிவடையும் வருடத்துக்கான பங்குடமை வணிகத்தின் இலாபம்

……………………………………………………………………………………………………

42) வரையறுத்த தேவிகா கம்பனி 01.01.2024 அன்று ரூ 20 ஆன குறிப்பிட்ட தொகையான பங்குகளை ஒரே தடவையில் காசு பெறும் அடிப்படையில் வழங்கியது. பங்கு வழங்களுடன் தொடர்புடைய தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

	விண்ணப்பித்த பங்குகள் எண்ணிக்கை	ஒதுக்கல் விகிதம்
பழைய பங்குதாரருக்கு	120000	1 : 1
ஊழியருக்கு	90000	3 : 1

தேவிகா கம்பனியின் பங்குவழங்களுடன் தொடர்புடைய கீழ்வரும் சந்தர்ப்பங்களுக்கான நாட்குறிப்பு பதிவுகள் (விளம்பல் அவசியமற்றது)

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

(அ) மேலதிக விண்ணப்பணம் மீள செலுத்துதல்

....

....

(ஆ) பங்குகளை ஒதுக்கி மூலதனமாக்கல்

....

....

43) கம்பனியொன்றின் பின்வரும் செயற்பாடுகளால் உரிமையாண்மை அதிகரிக்குமா குறையுமா அல்லது மாற்றமின்மையா? எனக் குறிப்பிடுக.

A - உரிமைப்பங்கு வழங்கல் ....

B - ஒதுக்கீடுகளை பங்குமூலதனமாக்கல் ....

C - சாதாரண பங்குதாரருக்கு இறுதிப்பங்குலாபம் பிரேரித்தல் ....

D - முதல்தடைவ மிகையாக மதிப்பிடப்பட்ட காணி மீண்டும் 2ம் தடவை குறைத்து மீள மதிப்பிடல் ....

44) வரையறுக்கப்பட்ட திலகர் பொதுக்கம்பனியின் 31.03.2024 இல் எடுக்கப்பட்ட தகவல்கள்

வருமான வரி ஏற்பாடு 2022/2023 - 290000

31.03.2024 இல் முடிவடைந்த ஆண்டில் செலுத்திய வருமான வரி - 520000

செலுத்திய வருமான வரியில் 31.03.2024இல் முடிவடைந்த ஆண்டுக்கான முதல் மூன்று காலாண்டுகளுக்கு செலுத்திய 300000 உம், மிகுதி 2022/2023 இல் முடிவடைந்த இறுதிக் காலாண்டுக்கு வரித்திணைக்களத்தால் இணங்கி செலுத்திய தொகையாகும். 31.03.2024இல் முடிவடைந்த இறுதிக் காலாண்டுக்கான வருமான வரிப்பொறுப்பு ரூ150000 ஆக மதிப்பிடப்பட்டது.

2024.03.31 இல் முடிவடையும் ஆண்டில் வருமானவரிச் செலவு?...

45) பின்வரும் கூற்றுக்கள் ஒவ்வொன்றும் உண்மையா/ பொய்யா எனக் குறிப்பிடுக.

உண்மை/ பொய்

A - பொது நோக்கத்துக்கான நிதிக்கூற்றுக்கள் தகவல்களைப் பயன்படுத்துவோரின் குறித்த தகவல் தேவைகளுக்கு ஏற்றவாறு அறிக்கைகளை தயாரிக்குமாறு வேண்டப்பட முடியாத பயன்படுத்துவோரின் தேவைகளுக்காக தயாரிக்கப்படுகின்ற நிதிக்கூற்றுக்கள் ஆகும். ....

B - SLFRS - 15 (வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிருந்தான வருவாய்) இன்படி "வாடிக்கையாளர் ஒருவருடனான ஒப்பந்தமொன்று பல்வேறு" செயற்றிறன் கடப்பாடுகளை உள்ளடக்கி இருக்க முடியும் ....

C - அறிக்கையிடும் நிறுவனத்தில் பொதுவாக தயாரிக்கப்படும் வருமானக் கூற்று ஊடாக காட்டப்படுகின்ற செயற்றிறன் குறித்த காலப்பகுதிக்கான இலாபம் அல்லது நட்டம் எனப்படும் ....

D - புதிய தகவல்கள் அல்லது புதிய அபிவிருத்திகள் காரணமாக கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றம் ஏற்படுதல் LKAS - 08 க்கு அமைய ஓர் மதிப்பீட்டு மாற்றம் ஆகும். ....

(All Rights Reserved / முழுப் பதிப்புரிமை உடையது)

46) நிதி அறிக்கைப்படுத்தும் எண்ணக்கரு சட்டகத்தில் கூறப்பட்ட நிதித்தகவல்களின் மேம்படுத்தும் தர ரீதியான பண்புகள் 4 இனைக் குறிப்பிடுக.

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

47) LKAS - 10 (அறிக்கைப்படுத்தும் நிதியாண்டுக்கு பின்னரான நிகழ்வுகள்) இன்படி நிகழ்வுகள் இரண்டு வகைப்படுத்தப்படும் அவ் இரண்டு வகைகளைக் குறிப்பிடுக.

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

48) வரையறுத்த வினோ பொதுக்கம்பனி ரூபா 3900000 நியாயமான பெறுமதி கொண்ட மோட்டார் வாகனமொன்றை சொத்துப்பயன்படுத்தல் உரிமையின் கீழ் அருணா கம்பனியிடம் 01.04.2023 இல் கொள்வனவு செய்தது.

- ✶ குத்தகைக் கடன்காலம் 5 வருடங்கள்
- ✶ 31.03.2024 இல் முதலாவது நிலையான தவணைக் கட்டணம் ரூபா 1000>000 செலுத்தப்பட்டது.
- ✶ குத்தகைத்தவணைக் கட்டணங்களில் உள்ளடக்கிய குத்தகை வட்டிகள்
  - முதலாவது தவணைக்கட்டண வட்டி ரூ 320000
  - இரண்டாவது தவணைக்கட்டண வட்டி ரூ 270000
  - மூன்றாவது தவணை குத்தகை வட்டி ரூ 200000

(அ) 01.04.2024 இல் குத்தகைப்பொறுப்பு?

……………………………………………………………………………………………………

(ஆ) 31.03.2025 இல் உள்ளவாறு நடைமுறை அல்லாத பொறுப்பு

……………………………………………………………………………………………………

➢ **49ம் 50ம் வினாக்களுக்கு விடையளிக்க பின்வரும் தகவல்களைப் பயனபடுத்துக.**

- ✶ வரையறுத்த சந்நிதி கம்பனியில் 31.03.2024 இல் முடிவடைந்த நிதிவருடத்தில் வரிகழிக்க முன் இலாபம் ரூ 720000 ஆகும். இவ் இலாபக் கணிப்பீட்டில் 31.03.2024 இல் காணி மீள்மதிப்பீடு தொடர்பான பின்வரும் செயற்பாடுகள் கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை.
- ✶ 31.03.2024 இல் காணி இரண்டாவது டதவையாக ரூ*220000* இனால் குறைத்து மதிப்பிடப்பட்டது. இக்காணி 31.03.2022 இல் முதல்தடைவ மீள் மதிப்பிடப்பட்ட போது ஏற்பட்ட மிகை ரூ150000 மீள் மதிப்பிட்டு ஒதுக்கமாக அறிக்கையிடப்பட்டிருந்தது. நடப்பாண்டு வருமான வரி ஏற்பாடு வரி கழிக்க முன் இலாபத்தில் 40% ஆகும்.

49) 31.03.2024 இல் முடிவடைந்த ஆண்டில் காணி மீள்மதிப்பீடு தொடர்பில் பொது நாளேட்டுப்பதிவு?

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

50) 31.03.2024 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான

(அ) காலப்பகுதிக்கான இலாபம் ……………………………………………………………..

(ஆ) காலப்பகுதிக்கான மொத்த முற்றடக்க வருமானம்………………………………………………

(4x20=80 புள்ளிகள்)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
நான்காம் தவணைப் பரீட்சை - 2024
National Field Work Centre, Thondaimanaru.
4th Term Examination - 2024

FWC

கணக்கீடு - II
Accounting - II

Three Hours 10 Min.

Gr -13 (2024)

33 **T** **II**

பகுதி II

➢ **01ஆம் வினா கட்டாய வினாவாகும். மொத்தமாக 05 வினாக்களுக்கு விடைகள் தருக.**

01) வானதி PLC யின் 31.03.2024 ல் பிரித்தெடுக்கப்பட்ட பரீட்சை மீதி

விபரம்	வரவு (ரூபா 000)	செலவு (ரூ 000)
கூறப்பட்ட மூலதனம் (ஒவ்வொன்றும் ரூ.2 படி)		12000
பொது ஒதுக்கம்		1600
மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்		2000
நிறுத்தி வைத்த வருவாய் 01.04.2023ல்		600
கொள்வனவு, விற்பனை	18200	38000
விநியோகச் செலவு	2400	
நிர்வாகச்செலவு	1080	
ஏனைய செலவு	1300	
வியாபார கொடுக்குமதி		1280
வியாபார வருமதி	1900	
18% தொகுதிக்கடன்		1500
தொகுதி கடன் வட்டி	120	
15% நிலையான வைப்பு	1500	
தரகு வருமானம்		20
சொத்து பயன்படுத்தல் உரிமை	2500	
ஆதனம் பொறி மற்றும் உபகரணம்	24000	
திரண்ட தேய்வு 01.04.2023		1600
வருமான வரி ஏற்பாடு 2022/2023		300
செலுத்திய வருமான வரி 2023/2024	1000	

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

செலுத்திய வருமானவரி 2022/2023	200	
செலுத்திய பங்குலாபம்	300	
01.04.2023 ல் இருப்பு	2000	
வியாபார முதலீடுகள்(1 வருடம்)	1800	
காசுக்கட்டுப்பாட்டு கணக்கு	2440	
நிதிச் செலவு	300	
சில்லறைக்காசு மீதி	40	
மூன்று மாத திறைசேரி உண்டியல்	320	
குத்தகை பொறுப்பு		2500
	61400	**61400**

மேலதிக தகவல்கள் :

31.03.2023 இல் முடிவடைந்த ஆண்டுக்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது கீழ்வரும் விடயம் சீராக்கப்பட வேண்டும்.

1. 31.03.2024ல் இருப்பின் கிரயம் ரூ2800. இவ் இருப்புகளில் ரூ500000 கிரயமானவை வழக்கிழந்தமையால் ரூ50000 விற்பனை செலவில் ரூ450000 விற்க முடியும் என மதிப்பிடப்பட்டது.

2. 01.10.2023ல் ஆரம்பிக்கும் வருடாந்த காப்புறுதி செலுத்தியது ரூ400000 விநியோக செலவினுள் உள்ளடங்கியது.

3. ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் உள்ளடக்கம்

	கிரயம் 31.03.2023ல்	திரண்டதேய்வு 01.04.2023ல்	எஞ்சிய பெறுமதி	பயன்தரு ஆயுட்காலம்
நிலம்	12000	—	—	—
கட்டிடம்	9000	1200	1000	40
இயந்திரம்	2000	400	400	8
தளபாடம் (01.04.2023ல் கொள்வனவு செய்தது)	1000	—	200	5
	24000	1600	—	—

எல்லா ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களும் நேர்கோட்டு முறையில் தேய்விடப்படுகிறது..

31.03.2024 ல் தகுதி பெற்ற மதிப்பீட்டாளரால் நிலமானது ரூ9500000 ஆக மீள் மதிப்பிடப்பட்டது. 01.04.2023ல் உள்ள மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் நிலம் மீள்மதிப்பீடு செய்ததால் ஏற்பட்ட மிகையை குறிக்கின்றது. மேலும் அன்றைய தினம் கட்டிடம் முதல் தடவையாக ரூ8500000 ஆக மீள் மதிப்பிப்பட்டது.

31.03.2024ல் ரூ500000 பெறுமதியான இயந்திரம் ரூ450000 விற்கப்பட்டு காசுக்கணக்கு வரவிலும் விற்பனை கணக்கு செலவிலும் பதியப்பட்டது தவிர வேறுபதிவுகள் இடம்பெறவில்லை. விற்பனைத் திகதி வரையிலான திரண்ட தேய்மானம் ரூ 150000 ஆக இருந்தது.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

4. சொத்து பயன்படுத்தல் உரிமையின் கீழ் 01.04.2023ல் ரூ500000 ஆரம்ப கொடுப்பனவு செலுத்தப்பட்டு மோட்டார் வாகனம் ஒன்று பெறப்பட்டது. செலுத்திய ஆரம்ப கொடுப்பனவு விநியோகச் செலவினுள் உள்ளடங்கியுள்ளதுடன் குத்தகைக்காலம் 4 ஆண்டுகள் சொத்தின் பயன்தரு ஆயுட்காலம் 5 ஆண்டுகள் வருடாந்த குத்தகை தவணைக்கட்டணம் ரூ875000 31.03.2024 லிருந்து செலுத்தப்பட வேண்டும். குத்தகைகால முடிவில் சொத்து உரிமை கொள்வனவாளருக்கு கைமாற்றப்படும்.

குத்தகை வட்டி பின்வருமாறு,

ஆண்டு	வட்டி
2023/2024	400
2024/2025	300
2025/2026	200
2026/2027	100

செலுத்திய முதலாவது தவணைப்பணம் வியாபார கொடுக்குமதிகள் கணக்கில் வரவு வைக்கப்பட்டது தவிர வேறுபதிவு இடம்பெறவில்லை.

5. விற்பனை உத்தரவாத ஏற்பாடு இவ்வருடத்திலிருந்து ரூ450000 ஏற்பாடு செய்ய வேண்டும்.

6. இவ்வாண்டுக்கு மதிப்பிடப்பட்ட வருமான வரி வரிக்கு முன் இலாபத்தில் 20%

7. ஏனைய செலவு பின்வருவனவற்றை உள்ளடக்குகிறது.

விற்பனை தரகு	150 000ரூ
இயக்குனர் கட்டணம்	700 000ரூ
கணக்காய்வு கட்டணம்	350 000ரூ

8. 31.03.2024ல் செலுத்த வேண்டிய மின்கட்டணமும் கணக்காய்வு கட்டணமும் முறையே ரூ35000, ரூ50000

9. 31.03.2024ல் இயக்குனர் தீர்மானங்கள்

ரூ 150000 பொது ஒதுக்கத்திற்கு மாற்றுதல்.

01.04.2023ல் உள்ள ஒவ்வொரு 10 பங்கிற்கு 1பங்கு எனும் அடிப்படையில் பொது ஒதுக்கத்தை மூலதனமாக்கல்.

ஒரு பங்கிற்கு ரூ7 படி இறுதி பங்குலாபம் பிரேரிக்கப்பட்டது.

வேண்டப்படுவது:-

(i) 31.03.2024ல் முடிவடைந்த ஆண்டுக்கு லாபம்.˙.நட்டம் மற்றும் ஏனைய முற்றும் அடங்கிய வருமானக் கூற்று.

(ii) 31.03.2024ல் முடிவடைந்த ஆண்டுக்கு உரிமை மாற்றல் கூற்று

(iii) 31.03.2024ல் உள்ளவாறான நிதிநிலமை கூற்று

(40 புள்ளிகள்)

02)

(அ) அமலா, ரம்பா, கவிதா ஆகியோர் முறையே 3 : 2 : 1 என்ற விகிதப்படி இலாபநட்டத்தினை பகிரும் பங்காளர்கள், இவர்களது பங்குடமை ஒப்பந்தம் வருமாறு

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

=> அமலா, ரம்பா, கவிதா ஆகியோர் முறையே ரூ15000, ரூ12000, மற்றும் ரூ10000 மாதாந்தம் சம்பளம் பெற தகுதியுடையவர்கள்.

=> ஒவ்வொரு பங்காளரும் ஆரம்ப மூலதனத்தில் 4% வட்டிக்கு உரிமையுடயவர்கள்.

=> பங்குடமைக்கு பங்காளர் வழங்கும் கடன்களுக்கும், பங்காளருக்கு பங்குடமை வழங்கும் கடன்களுக்கும் ஆணண்டுக்கு 8% வட்டி வழங்கப்பட வேண்டும்.

=> ரம்பா என்ற பங்காளிக்கு சொந்தமான கட்டிடத்தில் வணிகம் நடாத்தப்படுகிறது. இதற்கான வருடாந்த கட்டிட வாடகையில் அரைப்பகுதி இன்னும் செலுத்தப்படவில்லை.

01.04.2023 அன்று ரம்பா ஓய்வு பெற்றார், அன்றைய தினம் பங்குடமை வணிகத்தின் மொத்த நன்மதிப்பு ரூ180000 ஆக மதிப்பிடப்பட்டது. எனினும் நன்மதிப்பிற்கு கணக்கு எதுவும் பராமரிக்காது அனைத்துச் சீராக்கல்களும் பங்காளர் மூலதன கணக்கினூடாக செய்வது என இனங்காணப்பட்டது. அதன்பின் அமலாவும், கவிதாவும் இலாப நட்டத்தினை சமமாக பகிர்வதற்கு இணங்கிக் கொண்டனர்.

ரம்பா ஓய்வு பெறும் போது வணிகத்தின் ரூ38000 பெறுமதியான மிதிவண்டி ரம்பாவுக்கு வழங்கப்பட்டதுடன் மேலும் ரம்பாவுக்கு செலுத்த வேண்டிய மீதித் தொகையினை கடன்கணக்கிற்கு மாற்றவும், அதற்கு ஆண்டு வட்டியாக ரூ15000 செலுத்தவும் இனங்காணப்பட்டது.

31.03.2024இல் உள்ளவாறான பரீட்சைமீதி (ரூ000)

விபரம்	வரவு	செலவு
01.04.2023 - மூலதனக்கணக்கு - அமலா		600
- ரம்பா		400
- கவிதா		200
01.04.2023 - நடைமுறைக்கணக்கு - அமலா	100	
- ரம்பா		200
- கவிதா		150
6% வங்கிக்கடன்		100
31.03.2024 இல் இருப்புக்கள்	60	
விநியோக செலவுகள்	68	
நிர்வாகச் செலவுகள்	55	
கொடுத்த கழிவு	34	
பெற்ற கழிவு		40
ஆதனம் பொறி மற்றும் உபகரணம் (தேறியது)	1444	
10% முதலீடு (நீண்ட காலம்)	100	
வியாபார வருமதிகள்	60	
வியாபார சென்மதியாளர்		40
கட்டிட வாடகை	120	
வங்கிக்கடன் வட்டி	2	
கடன்கணக்கு - அமலா (01.04.2023ல் மீதி)	100	
01.04.2023ல் முற்பணக்காப்புறுதி	8	
காப்புறுதி	24	
விளம்பரம்	30	
ஐயக்கடன் ஒதுக்கம்		4
தேறிய சம்பளம்	180	
காசு காசுக்கு சமமானவை	502	
உத்தரவாத ஏற்பாடு		30
மொத்த இலாபம்		1123
	2887	2887

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

மேலதிக தகவல்கள்

(1) 31.03.2024 நிலவரப்படி சரக்குகளின் நிகர மதிப்பு 54000 ஆகும்.

(2) 31.03.2024 நிலவரப்படி செலுத்த வேண்டிய காப்புறுதி ரூ2000 ஆகும்.'

(3) உத்தரவாத ஏற்பாடு ரூ50000 ஆக இருக்க வேண்டும் என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(4) ஐயக்கடனுக்கான ஒதுக்கீடு வியாபார வருமதியாளரிடம் 5% ஆக இருக்க வேண்டும் என்று மதிப்பிடப்பட்டது.

(5) ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களுக்கு 5% பெறுமானத்தேய்வு செய்ய வேண்டும். (காணி தவிர)

(6) ஊழியர் சேமபால நிதியில் ஊழியர்களின் பங்களிப்பு 10% ஆகும். தொழில் வழங்குநரின் பங்களிப்பு 15% ஆகும். ஊழியர் நம்பிக்கை நிதியப்பங்களிப்பு 3% ஆகும்.

(7) 01.04.2023 நிலவரப்படி ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி வருமாறு

உருப்படிகள்	கிரயம்	திரண்ட தேய்மானம் (000ல்)
நிலம்	800	—
கட்டிடம்	400	80
மோட்டார் வான்	300	60
துவிச்சக்கரவண்டி	60	16
தளபாடம்	100	60
	1660	216

வேண்டப்படுவது:-

(1) பங்குடமை வணிகத்தின் 31.03.2024இல் முடிவடைந்த வருடத்துக்கான வருமானக்கூற்று

(2) பங்காளர் மூலதனக் கணக்குகள், நடைமுறைக்கணக்குகள்.

(30 புள்ளிகள்)

(ஆ) 31.03.2024 நிலவரப்படி கடன்கொடுநர் கட்டுப்பாட்டு கணக்குமீதி ரூ216500 ஆகும். இது கடன்கொடுநர் பேரேட்டு (பட்டியல் மீதி) மீதியுடன் இணைக்கவில்லை. வித்தியாசத்துக்கான காரணங்கள் வருமாறு,

(1) கடன்வழங்குநரான சுவேதாவிடம் பெற்ற கழிவு ரூபா1000 கட்டுப்பாட்டுக் கணக்கில் சரியாகப் பதியப்பட்ட போதிலும் சுவேதா கணக்கில் பதியப்படவில்லை.

(2) நானிதனுக்கு அனுப்பப்பட்ட ரூ2000 வரவுத்தாள் கடன்கொடுநர் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதியப்படவில்லை.

(3) கடன்கொடுநர்களுக்கான கொடுப்பனவுகள் ரூ5000 கடன்கொடுநர் கட்டுப்பாட்டுக் கணக்கில் தவறான பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் அது கடன்கொடுநர் தனிப்பட்ட கணக்கில் சரியாகப் பதியப்பட்டுள்ளது.

(4) கடன்கொடுத்தோருக்கு வழங்கப்பட்ட ரூ20000 கடன்கொடுநர் கட்டுப்பாட்டுக்கணக்கில் சரியாக பதிவுசெய்யப்பட்டுள்ளது. ஆனால் அது தனிப்பட்ட நபர் கணக்கில் தவறான பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(5) 31200 ரூபா கடன்கொள்வனவுகள் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டு கணக்கில் ரூபா32100 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.

தேவைப்படுவது:-

(1) திருத்திய கடன்கொடுநர் கட்டுப்பாட்டு கணக்கு

(2) கடன்கொடுத்தோர் பட்டியல்படி மீதி (சீராகக் முன்)

(10 புள்ளிகள்)

[மொத்தம் 40 புள்ளிகள்]

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

03) அபிராமி 2023 ஜனவரி 1ம் திகதி ஆரம்பித்த வணிகத்தின் 31.12.2023ல் முடிவடைந்த ஆண்டிற்கான பயற்சி பெறுகின்ற கணக்காளரினால் கண்டறியப்பட்ட தேறிய லாபம்ரூ345000 ஆகும். மேற்கூறப்பட்ட தேறிய லாபத்தை கணிப்பிடும் போது சில கொடுக்கல்வாங்கல்களும் சீராக்கங்களும் விடுபட்டிருந்தது. அவ்வாறு குறித்த ஆண்டு காலத்தில் நிகழ்ந்த இருப்பினும் கணக்குகளில் பதிவு செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்கள் சில கீழே தரப்பட்டுள்ள கணக்கீட்டு சமன்பாட்டில் காட்டப்பட்டுள்ளது

(ரூ 000)

	ஆதனம் பொறி உபகரணம்	சரக்கிருப்பு	வியாபார வருமதி	முற்பண வாடகை	காசு	உரிமையாண்மை	நீண்டகால கடன்	வியாபார சென்மதி	முற்பண வருவாய்
31.12.2023	1200	130	280	100	290	1170	600	180	50
1.		+60			-60				
2.		-40	+50			+60			-50
3.		+120						+120	
4.					-36	+4		-40	
5.			-50		+45	-5			
6.					-10	-2	-8		
7.			-10			-10			
8.		-20			+15	-5			
9.					+25	+25			
10.					-12	-12			

குறிப்பு - இல10 கொடுக்கல் வாங்கல்கள் மட்டும் இலாபத்தில் தாக்கம் ஏற்படுத்தாது.

மேலதிக தகவல்கள்-

(1) ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் 10% நேர்கோட்டு முறையில் தேய்விட வேண்டும். ஆனால் தேய்வு தொடர்பாக எவ்வித சீராக்கமும் செய்யப்படவில்லை. (01.07.2023ல் வணிகத்தினால் ரூ300000 பெறுமதியான தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டு கணக்குகளில் சரியாகப் பதியப்பட்டுள்ளது)

(2) 31.12.2023லுள்ள சரக்கிருப்புக்களின் சந்தைப்பெறுமதி ரூ20000 ஆக குறைவடைந்து காணப்படுவதுடன் அதன் கிரயம் ரூ26000 ஆகும். இது தொடர்பான எந்த சீராக்கமும் செய்யப்படவில்லை.

(3) 31.12.2023ல் நிறுவனத்தில் எதிர்பார்க்கப்படும் வியாபார வருமதி எதிர்பார்க்கை குறைப்பு நட்டத்திற்கான ஒதுக்கீடு 10% காணப்படல் வேண்டும். இன்னும் இது தொடர்பாக எவ்வித பதிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

(4) முற்பண வாடகை என்பது 1.12.2023 மாதாந்த வாடகை ரூபா20000 வீதம் முற்பணமாகப் பெற்ற தொகை முற்பண வாடகையாக பதியப்பட்டுள்ளது. இவை இலாப சீராக்கத்தில் கவனத்தில் கொள்ளப்படவில்லை.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

வேண்டப்படுவது:-

1) இல1 தொடக்கம் 10 வரையான கொடுக்கல்வாங்கலை விபரிக்குக.
2) 31.12.2023 முடிவடைந்த ஆண்டு இலாபத்தினை சீராக்கம் செய்யும் கூற்று
3) மேலதிக தகவல்களை சீராக்குவதற்கான நாட்குறிப்பு பதிவுகள்
4) 31.12.2023 ல் பின்வரும் மீதிகளை கணிக்குக.
   a. ஆதனம் பொறி உபகரணங்களின் முன்கொண்டு செல் பெறுமதி
   b. வியாபார வருமதிகளின் முன் கொண்டு செல்பெறுமதி

(40 புள்ளிகள்)

04)

(அ) பூபதி விளையாட்டுக்கழகத்தின் 01.04.2023, 31.03.2024 ஆகிய திகதிகளில் காணப்பட்ட மீதிகள் வருமாறு,

	31.03.2024	01.04.2023
கட்டிடம்	270000	300000
விளையாட்டு உபகரணம்	420000	375000
பெறவேண்டிய சந்தா	60000	45000
முற்பணமாக பெற்ற சந்தா	30000	15000
சிற்றுண்டிச்சாலை இருப்பு	30000	22500
காசு	50000	187500

31.03.2024ல் முடிவடைந்த வருடத்துக்கான காசுப் பெறுவனவுகள், கொடுப்பனவுகள் தொடர்பான தகவல்கள் வருமாறு,

<u>காசுப்பெறுவனவுகள்</u>

அங்கத்தவர் சந்தா	150000ரூ
சிற்றுண்டிச்சாலைப் பெறுவனவு	270000ரூ
ஆயுள்சந்தா	180000ரூ
அனுமதிக்கட்டணம்	45000ரூ
விளையாட்டுப்போட்டி வருமானம்	90000ரூ
பொருட்காட்சி வருமானம்	45000ரூ
சஞ்சிகை விற்பனை	37500ரூ
கட்டிட நன்கொடை	450000ரூ

<u>காசுக்கொடுப்பனவுகள்</u>

காணி கொள்வனவு	1000,000ரூ
விளையாட்டு உபகரணம்	75000ரூ
மின்சாரம்	18000ரூ
ஊழியர் சம்பளம்	45000ரூ
மைதானப்பராமரிப்பு	30000ரூ
விளையாட்டுப்போட்டிச் செலவு	27000ரூ
அச்சடித்தல் செலவு	15000ரூ
எழுதுகருவிகள்	4500ரூ
சிற்றுண்டிச்சாலை செலவு	60000ரூ
சிற்றுண்டிச்சாலை உணவுக்கொள்வனவு	130500ரூ

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

ஏனைய தகவல்கள்

1. ஆயுள்சந்தா ஆனது 10 வருடங்களுக்கு மட்டும் வருமானமாகப் பகிர்ந்தளிப்பது என அங்கத்தவர் முடிவு செய்தனர்.

2. காசுப்பெறுவனவில் காணப்படும் அங்கத்தவர் சந்தாவினுள் 01.04.2023ல் காணப்பட்ட பெறவேண்டிய சந்தாவும், 31.03.2024ல் முற்பணமாகப் பெற்ற சந்தாவும் உள்ளடங்கப்பட்டது.

3. அனுமதிக்கட்டணமானது இந்த ஆண்டில் முழுவதனையும் வருடத்தின் வருமானமாக கருதுதல் வேண்டும்.

வேண்டப்படுவன,

(1) அங்கத்தவர் சந்தா கணக்கு

(2) சிற்றுண்டிச்சாலை வருமானக்கூற்று

(3) பூபதி விளையாட்டு கழகத்தின் 31.03.2024ல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக்கூற்று

(4) 31.03.2024ல் நிதிநிலமைக்கூற்று

(20 புள்ளிகள்)

(ஆ) கவியரசி வணிகத்தின் கணக்கீட்டுக்காலம் 31.12.2023 அன்று முடிவடைகின்றது. மற்றும் அந்தக்காலத்திற்கான இலாபம் ரூ85000 ஆகும். இவ் இலாபத்தினைக் கணக்கிடும் போது பின்வரும் மாற்றங்கள் செய்யப்படவில்லை.

1. இருப்பின் கிரயம் ரூ50000 எனக்கணக்கிடப்பட்ட போதிலும் அவற்றின் தேறிய நிகரப்பெறுமதி ரூ40000.

2. ரூ60000 கிரயமான இருப்பு தீப்பிடித்தது. அதற்காக காப்புறுதிக்கம்பனி 60% இழப்பீடு வழங்க ஒப்புக் கொண்டது.

3. வணிகத்தின் ஒரு பகுதி 01.04.2023 முதல் ரூ10000ற்கு மாதாந்த வாடகைக்கு விடப்பட்டது. 2 வருடங்களுக்கான வாடகை வருமானம் காசாக பெறப்பட்டு அது வாடகை வருமானமாக அறிக்கைப்படுத்தப்பட்டு இருந்தது.

4. கடன் அடிப்படையில் ரூ50000 கிரயமான இயந்திரம் 01.07.2023இல் கொள்வனவு செய்யப்பட்டது. இது தவறுதலாக கொள்வனவுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டது. வணிகமானது இயந்திரங்களுக்கு 10% நேர்கோட்டு முறையில் பெறுமானத்தேய்வு செய்கின்றது.

5. 01.12.2023 அன்று ரூபா60000 கிரயமான இருப்புக்கள் ரூபா 80000ற்கு விற்பனை செய் அல்லது திருப்பி அனுப்புக என்ற நிபந்தனை அடிப்படையில் அனுப்பப்பட்டு கடன்விற்பனையாக ஏடுகளில் பதிவுசெய்யப்பட்டது. எனினும் இப்பொருள்கள் 31.12.2023 வரை விற்பனையாகவில்லை என நம்பகரமாக தெரியவந்தது.

வேண்டப்படுவது,

(1) மேலே உள்ள ஒவ்வொரு சீராக்கத்திற்கும் பொருத்தமான நாளேட்டுப்பதிவு.

(2) சீராக்கியபின் தேறிய இலாபத்தினை காட்டும் கூற்று

(20 புள்ளிகள்)

[மொத்தம் 40 புள்ளிகள்]

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

05)

(அ) சூரியன் வணிகத்தில் தயாரிக்கப்பட்ட நிதி நிலைமை அறிக்கைகளில் இருந்து பின்வருவன எடுக்கப்பட்டன.

	மாத இறுதியில் (000ல்)	
(1)	31.01.2023	28.02.2023
விற்பனை	800	1200
(-) விற்பனைக்கிரயம்	(600)	(750)
மொத்த இலாபம்	200	450
(+) செயற்பாட்டு வருமானம்	10	40
(-) செயற்பாட்டு செலவீனம்	(220)	(130)
தேறிய நட்டம்/ இலாபம்	(10)	360

(2) மொத்த விற்பனையில் 80% கடன் அடிப்படையிலானது. அதில் $^{3}/_{4}$ பங்குக்கான பணம் விற்பனை செய்யப்பட்ட மாதத்திற்குள் பெறப்பட்டு மீதமுள்ள தொகை அடுத்த மாதத்தில் பெறப்படும்.

(3) அனைத்துக் கொள்வனவுகளும் கடன் அடிப்படையிலானது அதில் அரைப்பகுதி வாங்கிய மாதத்திற்குள் கொடுக்கப்படும் மீதி அடுத்த மாதத்தில் செலுத்தப்படும்.

(4) 28.02.2023 அன்று முடிவடையும் மாதத்திற்கான வங்கி அறிக்கை.

திகதி	விபரம்	வரவு	செலவு	மீதி
01.02.2023	மீதி			*(50000)*
05.02.2023	காசு வைப்பு		*280000*	*230000*
07.02.2023	கடன்கொடுநர்	*250000*		*(20000)*
10.02.2023	வங்கி கட்டணம்	*1000*		*(21000)*
15.02.2023	கடன்படுநர் காசோலை வைப்பு		*539000*	*518000*
24.02.2023	நேரடி வைப்பு		*15000*	*503000*

(5) ரூபா *37000* காசோலை *2023* ஜனவரி மாதத்தில் வழங்கப்பட்டது. அக்காசோலையானது பெப்ரவரி *2023* வரை வங்கியில் சமர்ப்பிக்கப்படவில்லை. ஜனவரி மாதத்தில் வழங்கப்பட்ட மற்றும் வைப்புச் செய்யப்பட்ட ஏனைய அனைத்துக் காசோலைகளும் ஜனவரி மாதத்திலேயே வங்கி அறிக்கையுடன் முறையாக சரிசெய்யப்பட்டன.

(6) வங்கிக்கூற்றினை பெற்ற பின்னரே கடன்படுநரிடம் இருந்து பெற்ற பணம், வங்கிக்கட்டணங்கள் இடம்பெற்றது தெரிய வந்தது.

(7) 01.01.2023 இன் வியாபார இருப்பு ரூ*40000.* இந்த இருப்பின் மதிப்பு ஜனவரி மாதத்தில் ரூ*15000* அதிகமாகவும், பெப்ரவரியில் ரூ*22000* குறைவாகவும் காணப்பட்டது. *01.01.2023* நிலைவரப்படி வியாபார வருமதியாளர் ரூ*30000*, மற்றும் கடன்கொடுநர் ரூபா*25000* மும் ஆகும்.

(8) வணிகமாகது ஒவ்வொரு மாதமும் செயற்பாட்டுச் செலவீனங்களை முறையாக செலுத்துகின்றது. வருமான அறிக்கையில் குறிப்பிப்பட்டுள்ள அனைத்து செயற்பாட்டு வருமானமும் தொடர்புடைய மாதத்தில் வணிகத்தினால் பெறப்பட்டது.

(9) ரூ*12000* உரிமையாளரால் காசாக பற்றியது பணக்கட்டுப்பாட்டுக் கணக்கில் ரூபா *21000* ஆக பதியப்பட்டது.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

வேண்டப்படுவது:-

1) 2023 பெப்ரவரி மாதத்திற்கான வணிகத்தால் தயாரிக்கப்பட்ட பணக்கட்டுப்பாட்டு கணக்கு (வங்கி அறிக்கையை பெறுவதற்கு முன்பு)

2) 28.02.2023 நிதி நிலை அறிக்கையில் காட்டப்பட வேண்டிய பின்வருவனவற்றை கணிக்குக.

- ✶ காசு மீதி
- ✶ கடன்படுநர் மீதி
- ✶ கடன்கொடுநர் மீதி
- ✶ இறுதி இருப்பு மீதி

(30 புள்ளிகள்)

(ஆ) ஆதவன் வணிகத்தின் கணக்குப் பதிவாளர் பரீட்சை மீதியைத் தயாரித்த போது அதன் வரவுப்பக்கத்தில் ரூபா45000 குறைவு ஏற்பட்டது. பின்னர் பின்வரும் வழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

1. காசுப்பெறுவனவு நாளேட்டில் கோகுலனுக்கு விடப்பட்ட கழிவு ரூ4500 கழிவு நிரலில் ரூ5400 எனப்பதியப்பட்டது.

2. விற்பனை நாளேட்டில் கூட்டுத்தொகை ரூபா25000 ஆல் குறைவாக கூட்டிப்பதியப்பட்டது.

3. ரூ4500 செலவுத்தாள் ஒன்று கொள்வனவுத்திரும்பல் கணக்கில் செலவில் ஒரு பதிவு மட்டும் பதியப்பட்டிருற்தது.

4. செலுத்திய சம்பளம் ரூபா24000 சம்பளக் கணக்கில் ரூபா42000 எனப்பதியப்பட்டது.

5. சுதாவிடம் இருந்து கிடைக்க வேண்டிய ரூ5000 நட்டக்கடனாக பதியப்பட்டமை ஏடுகள் எவற்றிலும் பதியப்படவில்லை.

6. வருமதியாளர் கட்டுப்பாட்டுக் கணக்கின் வரவுப்பக்கம் ரூ1000 கூட்டிப்பதியப்பட்டது.

7. காசுக்கொடுப்பனவு நாளேட்டின் காசுக்கொள்வனவு நிரலின் கூட்டுத்தொகை ரூபா27500 கடன்கொடுநர் கட்டுப்பாட்டுக்கணக்கில் கடன்கொள்வனவாகப் செலவில் பதியப்பட்டது.

வேண்டப்படுவது:-

(1) மேலே தரப்பட்ட வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்பு பதிவுகள்

(2) தொங்கல் கணக்கு

(10 புள்ளிகள்)

[மொத்தம் 40 புள்ளிகள்]

06)

(அ) வரையறுக்கப்பட்ட நிமல் கம்பனி 01.04.2024இல் குத்தகை ஒப்பந்த அடிப்படையில் வாகனமொன்றினை வரையறுத்த நம்பி கம்பனியிடம் இருந்து கொள்வனவு செய்தது. அதன்போது 01.04.2023இல் வாகனத்திற்கு "ஆரம்பகொடுப்பனவாக" ரூபா550000 வரையறுத்த நம்பி கம்பனிக்கு செலுத்தப்பட்டதுடன் நிமல் கம்பனிக்கு ரூ40400 நேர்கிகரயமும் ஏற்பட்டது.

31.03.2024 இலிருந்து வருடாந்த குத்தகைத் தவணைக்கட்டணமாக ரூபா240000 நான்கு வருடங்களுக்கு செலுத்தி முடிக்கப்பட்டல் வேண்டும். குத்தகையின் வட்டி வீதம் 10% என்பதுடன் அவ் வட்டியில் கீழான கழிவுக்காரணி பின்வருமாறு,

வருடம்	1	2	3	4
கழிவுக்காரணி	0.909	0.826	0.751	0.683
குத்தகை வட்டி(ரூபா)	76056	59662	41628	21791

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

குத்தகைக்கால முடிவில் இவ்வாகனம் வரையறுக்கப்பட்ட நிமல் கம்பனிக்கு சொந்தமாகும். இவ்வாகனத்தின் பயன்தரு ஆயுட்காலம் மற்றும் இழிவுப்பெறுமதி என்பன முறையே 05 வருடங்கள் ரூ51000 எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் 01.04.2023 இல் ரூ600000 பெறுமதியுள்ள மோட்டார் வான் வரையறுத்த நிமல் கம்பனியில் காணப்பட்டதுடன் இது 04.04.2022 இல் கொள்வனவு செய்யப்பட்டதுடன் அதன் பயன்தரு ஆயுட்காலம் 05 வருடங்கள் ஆகும்.

வேண்டப்படுவது:-

(1) 01.04.2023இல் காணப்பட வேண்டிய குத்தகைப்பொறுப்பின் நிகழ்காலப்பெறுமதி

(2) 01.04.2023இல் சொத்துப்பாவனை உரிமையாக இனம்காண வேண்டிய பெறுமதி

(3) 31.03.2024இல் முடிவடையும் வருடத்துக்கான சொத்துப்பாவனை உரிமை, குத்தகைவட்டி, குத்தகைப்பொறுப்பு கணக்குகளை தயாரிக்குக.

(4) 31.03.2024இல் முடிவடைந்த காலப்பகுதி நிதி அறிக்கைகளில் காட்டப்படும் பின்வரும் பெறுமானங்கள்.

(அ) நடைமுறை அல்லாத சொத்துக்கள் (தேறிய பெறுமதி)

(ஆ) நடைமுறை அல்லாத பொறுப்புக்கள்

(இ) நடைமுறைப்பொறுப்புக்கள்

(ஈ) விநியோக செலவினுள் காட்டப்படும் பெறுமான தேய்வு

(உ) நிதிக்கிரயமாக காட்டப்படும் குத்தகை வட்டிச் செலவீனம்

(25 புள்ளிகள்)

(ஆ) “மரமடுவம்: மரத்திலான அலுமாரி உற்பத்தி நிறுவனத்தின் 31.12.2023 முடிவடைந்த காலப்பகுதிகான தகவல்கள் வருமாறு,

01.01.2023 இல் மரப்பலகை இருப்பு	125000
01.01.1023 இல் நடைமுறை வேலை இருப்பு (தொழிற்சாலை கிரயத்தில்)	90000
மரப்பலகை கொள்வனவு	520000
தொழிற்சாலை வாடகை	46000
மணல், கடதாசி, ஆணிகள்	38000
தொழிற்சாலை மேற்பார்வையாளர் சம்பளம்	73000
இயந்திர இயக்குனர் கூலி	18000
ஏனைய நேர்ச்செலவு	10000
இயந்திர சாதன தேய்வு	40000
31.12.2023 இல் பலகை இருப்பு	82000
31.12.2023 இல் நடைமுறை இருப்பு	74000

மேலதிக தகவல்கள்,

(1) இவ்வாண்டில் ரூபா50000 கிரயமான பலகைகள் களவாடப்பட்டன.

(2) இவ்வாண்டில் 50 அலுமாரிகள் உற்பத்தி செய்யப்பட்டதுடன் ஒரு அலுமாரிக்கான தச்சருக்கான கூலி ரூ5000 ஆகும்.

(3) ஒரு அலுமாரிக்கான பூட்டுக்கள், பிணைச்சல் கிரய ரூபா2000 ஆகும்.

வேண்டப்படுவது :-

31.12.2023 இல் முடிவடைந்த வருடத்துக்கான உற்பத்திக்கிரயக்கூற்று

(15 புள்ளிகள்)

[மொத்தம் 40 புள்ளிகள்]